



# பரிபூர்ணாஞ்சலி மலர்

பிரம்மஸ்ரீ

விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா

01.12.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



யாழ்ப்பாணம்-உடுவில் கற்பொக்கணையைச் சேர்ந்த

ஓய்வு பெற்ற உபஅதிபரும் பத்திரிகையாளரும்

சமாதான நீதவானுமாகிய

# பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா (கணேஸ்)

*அவர்களின்*

# 'பரிபூரணாஞ்சலி' மலர்

பார்த்திப வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கி
அருமைத் தலைவராக ஆசானாகத் தன்னை
அர்ப்பணித்து எம்மை வளர்த்து ஆளாக்கி
நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத்
தெய்வத்தின் திருப்பாத மலர்களில்
இந்நினைவு அஞ்சலி மலரை
அன்புடன் சூட்டி சமர்ப்பித்து
வணங்குகின்றோம்.

"கணேச வாசம்"
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மண்ணுலக
வாழ்வில்
20.07.1942

வானுறையும்
தெய்வமாய்
22.11.2005

அமரர்

பிரம்மஸ்ரீ

# விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா


அவர்கள்

திதி வெண்பா

பார்த் திபப் பேராண்டிற் பார் நடுக் குங் கார்த்திகையைச்
சார் கிருஷ்ண பட்சத்துச் சப்தமியில் - பேரார்
பரி பூரணானந்தப் பண்பான ஆசான்
அரிய சிவன் தாளடைந்தான் ஆம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவயதில்



தந்தை - தாயார்



விவாகப்பதிவு 28.01.1971



திருமணம் 14.06.1971



மனைவியுடன் 1971




மனைவி குழந்தைகளுடன் 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணியில் ஆசிரியர் குழாமுடன்



யா/ மானிப்பாய்
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
1970



1974
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
பலாலி



யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை 1987




யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணியில் மாணவச் செல்வங்களுடன்




தனியார் பிரத்தியேக வகுப்பு 1972



தலயாத்திரை -திருக்கோணேஸ்வரம் 1970



கல்விச் சுற்றுலா 1970




விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் பணியில்



திருமுறைப் பெருவிழா




நிறுவுநர் தினமும் பரிசளிப்பும் 2001




உடுவில் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி மாணவர் ஒன்று கூடல் 2004



பன்முகச் சேவைப் பாராட்டு விழா 12.10.2003



விளையாட்டு விழா



உடுவில் இந்து இளைஞர் மன்ற கௌரவ ஆலோசகராக



யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பிரியாவிடை 2002



விழாநாயகன் மாணவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17.09.2003

மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி. சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதவனாக சத்தியப்பிரமாணம்



2002

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவில் (அறுபதாவது அகவை)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் அடியானென்(று)
ஏசப் பட்டேன் இனிப் படுகின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட்டேன்உன் னடியேனே

## திருவிசைப்பா

இவ்அரும் பிறவிப் பௌவநீர் நீர்த்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே ஆர்துணை என்பால்
அஞ்சல்என் றருள்செய்வான் கோவில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற
உழறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யாரரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏற்றினார் உய்ய உலகெலாம்.

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளோனே நாககிரிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேச பஞ்சரத்தினம்

முதாகராத்த மோதகம் ஸ்தாவிமுத்தி சாதகம்
கலாதராவதம் சகம் விலாசி லோக ரக்ஷகம்!
அநாயகைக நாயகம் விநாசி தேப தைத்யகம்
நாதசுபாசு நாசகம் நமாமி தம் விநாயகம்!!

நதேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத் சுராரி நிர்ஜரம் நதாதிகா பதுத்தரம்!
சுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மகேஸ்வரம் தம் ஆஸ்ரயே பராத் பரம் நிரந்தரம்"

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ரம் அக்ஷரம்!
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்!!

அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தநம் சுராரி கர்வ சர்வணம்!
ப்ரபஞ்ச நாச பீஷணம் தநஞ்ஜயாதி பூஷணம்
கபோல தாந வாரணம் பஜே புராண வாரணம்!!

நிதாந்த காந்த தந்த காந்திம் அந்தகாந்தகாத் மஜம்
தவசிந்த்ய ரூபம் அந்மஹீநம் அந்தராயக்ருந்தநம்!
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகிநாம்
தம் ஏகதந்தம் அத்புதம் விசிந்தயாமி ஸந்ததம்!!

மஹாகணேச பஞ்சரத்னம் ஆதரேண யோகவந்ஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மான் கணேஸ்வரம்!
அரோகதாம் அகோஷதரம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதம்
ஸமாஹிதாயுர் அஷ்டபூதிம் அப்யுபைதிசோகசிராத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

திருவும், கல்வியும் சீரும் தளைத்தோங்கும் தொல்லூராய், யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்க்கும் உடுவில் என்னுஞ் சிற்றூரில் சிவஸ்ரீ தி.விஸ்வநாதக் குருக்கள் லலிதாம்பாள் தம்பதிக்கு மகனாக 1942.07.20இற் பிறந்தவர் பரிபூரணானந்த சர்மா. பல்லாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவைச் சேர்ந்த கும்பகோணத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறிய இராமர் என்பவருடைய வழித்தோன்றல், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த தந்தையார் சிவஸ்ரீ.தி.விஸ்வநாதக் குருக்கள்; தாயார் லலிதாம்பாள், காஞ்சிபுரத்திலிருந்து வந்த குஞ்சிதபாத பட்டர் பரம்பரையைச் சேர்ந்தவர்.

கொழும்பு காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவரும் பிரபல சோதிடராக விளங்கியவருமான அமரர் வி.பரமேஸ்வரன், அமரர் ஸ்ரீமதி வாலாம்பிகை அம்மா சுப்பிரமணிய ஐயர், அமரர் வி.சிவசாமிக் குருக்கள் ஆகியோரைப் பாசமிகு உடன்பிறப்புக் களாகக் கொண்டிருந்தவர் பரிபூரணானந்த சர்மா.

இவர் தனது ஆரம்பக் கல்வியைத், தன் பெரிய தந்தையார் பண்டிதர் தி.சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்த உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையிற் கற்றார். இடைநிலைக் கல்வியைக் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் பெற்று 1959ஆம் ஆண்டிலே க.பொ.த (சா/த) பரீட்சையிற் சித்தியடைந்தார். இருமொழிப் பண்டிதரும். தமிழ் சமஸ்கிருதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயம் ஆகிய பாடங்களை மாணவருக்கு நன்கு போதித்தவருமாகிய தந்தையார் விஸ்வநாதக்குருக்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தமை இவருடைய கல்வி வளர்ச்சிக்கும் ஒழுக்கச் சிறப்புக்கும் பெரிதும் உதவியாக இருந்தது.

தலைநகர் கொழும்பிற்கு வெளியேயிருந்து வெளிவரத் தொடங்கிய முதலாவது தமிழ் நாளிதழ் என்ற பெருமைக்குரிய "ஈழநாடு" இதழின் நிருபராக 1963ஆம் ஆண்டில் இவர் கடமையாற்றத் தொடங்கினார். 1965இல் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிற் சேர்ந்து கற்று, 1967ஆம் ஆண்டில் தமிழ் வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்தார்.

வர்த்தக ஆசிரியராக நியமனம் பெற்று 1968.01.01 இல் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலே தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். நான்கு ஆண்டுகள் அப்பாடசாலையிற் கடமையாற்றிய பின்னர், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு ஓராண்டு காலம் அங்கே பணிபுரிந்தார். அக்காலத்திலேயே அவர் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய - மாணவனானார். இரண்டு ஆண்டு காலம் பயிற்சியை வெற்றிகரமாக நிறை வேற்றிய இவர் மாத்தளை இந்து மகாவித்தியாலயம் (04 ஆண்டுகள்), எனமல்பொத்த முஸ்லிம் வித்தியாலயம் (03 மாதம்), கனகராயன்குளம் மகாவித்தியாலயம் (01மாதம்), முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி (02 ஆண்டுகள்), ஆகிய வெளிமாவட் டப் பாடசாலைகளிற் கடமையாற்றிய பின்னர் 1982ஆம் ஆண்டில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் தன் கடமையைத் தொடர்ந்தார். எட்டு ஆண்டு காலச் சேவையின் பின், சில மாதங்கள் நவாலி மகாவித்தியாலயத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிவிட்டு, 1992ஆம் ஆண்டிலே கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலே வர்த்தகக் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய இவர், ஆசிரியர் கழகத் தலைவர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், பகுதித் தலைவர் போன்ற பதவிகளையும் திறம்பட வகித்து, 2002ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

கடமையுணர்ச்சி, கற்பித்தற் திறமை, எளிமையான வாழ்க்கை, இனிமையான சுபாவம், பிறர்க்குதவும் பாங்கு போன்றவற்றால், இவர் கற்பித்த எல்லாப் பாடசாலைகளிலும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள் போன்ற எல்லாத் தரப்பினரின் மதிப்புக்கும் இவர் ஆளாகியிருந்தார்.

மானிப்பாய், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளையிலேயே 1971ஆம் ஆண்டில் இவருடைய திருமணம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி பிரம்மஸ்ரீ ம.செந்தில்நாதக் குருக்கள் - சங்கரம்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி ரேவதி அம்மா இவருடைய வாழ்க்கைத் துணைவியானார். இனிய இல்வாழ்க்கையின் பயனாக, சுபாஷினி, சசிவர்ணன், சுபாங்கினி ஆகியோரை நன்மக்கட் பேறாகக் கொண்டார். சுபாஷினி சிவகுமார் தம்பதிக்கு கார்த்திக், பிரவீன், ஹரிஹரன் ஆகிய மக்கட் செல்வங்களுளர். கனிஷ்ட புத்திரி சுபாங்கினி சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான இளவரசு சர்வேஸ்வரக் குருக்கள் ஸ்ரீகாந்தக்குருக்களைத் திருமணம் செய்துள்ளார். விஞ்ஞானப் பட்டதாரியான மகன் சசிவர்ணன் ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணக் கிளையில் பணியாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குரிய கடமைகள் அனைத்தையும் செவ்வனே ஆற்றிய அதே வேளையில், பத்திரிகைத்துறைக் கடமைகளையும் மிகுந்த உற்சாகத்துடன் செய்து வந்தவர் பரிபூரணானந்த சர்மா. 1985ஆம் ஆண்டில் உதயன் -சஞ்சீவி பத்திரிகைகளில் நிருபரானார். செய்திகளை அனுப்புவதுடன் அமையாமல், செய்தி விளக்கக் கட்டுரைகள், விவசாய விருத்திக்கட்டுரைகள், பிரமுகர் பேட்டி, நூல் விமர்சனம் போன்றவற்றையும் எழுதி, பத்திரிகையின் தரம் உ யர்வதற்கு உதவினார். உடுவில் கலைமதி சனசமூகநிலையம், உடுவில் இந்து இளைஞர் மன்றம் போன்றவற்றின் வளர்ச்சியில் இவர் அக்கறை எடுத்தார். இவருடைய சமூகப்பணிகளை அங்கீகரிக்கும் வகையில், இவரை ஓர் சமாதான நீதவானாக இலங்கை அரசாங்கம் 2003இல் நியமித்துக் கௌரவித்தது. எந்த வைபவத்திற்கு அழைத்தாலும், தவறாது சமூகமளித்து வைபவத்தைச் சிறப்பிப்பது இவருடைய நற்பண்புகளுள் ஒன்று. ஆலயத் திருவிழாக்கள், சமயச் சொற்பொழிவுகள், நியந்த்ரீ, இந்துக் குருமார் ஒன்றியம், இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் - சம்பந்தமான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் இவர் ஆற்றிய சமயப் பணிகள் தனித்தன்மை வாய்ந்தவை.

கடமையுணர்ச்சி நிறைந்த நல்லாசானாக, பாசம் மிக்க இல்லத் தலைவனாக, தோழமை உணர்ச்சி மிக்க நண்பனாக, சமூகப் பொறுப்பு நிறைந்த பத்திரிகையாளனாக, உயர்ந்த சிந்தனையும் எளிமையான வாழ்க்கையும் கொண்ட ஒரு மனிதனாக பல்வேறுபட்ட மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக வாழ்ந்த பரிபூரணானந்தசர்மா, தன் குலதெய்வமாகிய கற்பொக்கணை விநாயகப் பெருமானின் திருவடி நிழலில் நிரந்தரப் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார் என்பதற்கையமில்லை.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபூரணனான மானுடன்

அமரர் பரிபூரணானந்தசர்மா அவர்களை நான் இப் பிரிவில் கடமையாற்ற வந்த நாளிலிருந்தே அறிவேன். அமைதி யான, புன்னகை தவழும் முகத்துடன் ஒரு ஊடகவியலா ளனுக்கேயுரிய பண்புகளோடு உலா வந்த சர்மா அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த செய்தியையும் குறித்த ஊடகத்தி னூடாகவே அறிந்த போது மிகவும் அதிர்ச்சி ஏற்பட்டது.

உண்மை பொய்யை ஆராயாது வெறும் பரபரப்பை உண்டாக்குவதை மட்டும் நோக்காகக் கொண்டு தொழிற்படு கின்ற பலரின் மத்தியில் ஒரு ஊடகவியலாளனுக்குரிய பொறுப்பை உணர்ந்து அதனை எழுத்தில் வடித்தவர் திரு.சர்மா அவர்கள். ஒரு சிறந்த ஆசிரியராக, சமாதான நீதவானாக சமூகத்தொண்டனாக, ஊடகவியலாளராக எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பரிபூரணமான மானுடனாக அனைவருக்கும் வழிகாட்டும் வகையில் வாழ்ந்து காட்டிய திரு.சர்மா அவர்களை இறைவன் சற்று அவசரப்பட்டு அழைத்துக் கொண்டான் என்றே தோன்றுகின்றது.

எமது பணிமனையில் நிகழும் பல நிகழ்வுகளிலும் ஒரு குடும்ப உறுப்பினர் போல் கலந்து கொண்டு, நிகழ்வுகளை செய்தியாக்கி ஊடகங்களில் தவழ விட்ட அன்னாரின் பணியை இச்சமயத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

வையத்தில் அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு அமைவாகத் தெய்வத்துள் வைக்கப்பட இறைவனை இறைஞ்சி வேண்டுகிறேன்.

சி.திவாகரன்,
பிரதேச செயலாளர்,
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நேசித்த பத்திரிகையாளர் வி.பி. சர்மா அவர்கள்

நல்ல நண்பனும், பண்பாளனும், இன்முகத்தானுமாகிய "வி.பி.சர்மா" என்று அன்போடு அழைக்கப்படும் மூத்த பத்திரிகையாளர் 63 ஆவது வயதில் காலமானார் என்ற செய்தியை உதயன் பத்திரிகையில் பார்த்தவுடன் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். "ஆ" நல்ல செய்திகளை, நல்ல கல்விச்சேவைச் செய்திகளை, இறக்கும் வரை ஒரு துடிப்புற்ற செய்தியாளராகச் செய்திப் பணிபுரிந்த சர்மா நினைக்கும் போதும் அவரது பணிகளின் சிறப்பினை நோக்கும் போது எங்கள் பகவான் பாபாவின் அருள் உரைகள் உவமையாக சான்று பகருகின்றன.

"ஆன்மீக சாதனை என்பது நன்மையைப்பேசி, நல்லதையே நினைத்து, நடல்லதையே பார்த்து, நல்லவற்றையே கேட்டு, நன்மையே செய்வதுதான்" மேற்கூறிய மகான் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே எங்கள் வி.பி.சர்மா அவர்கள் வலி.தெற்குப் பகுதிகளை பிரதேசச் செய்தியாளராக பணிபுரிந்து பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். குறிப்பாக எமது வலிகாமவலய, உடுவிற்கோட்ட கல்விச்சேவைகளைக், கல்வி மேம்பாடு அடைய கல்வி அபிவிருத்திக்கான உயரிய பங்களிப்பினை நல்கியமை எமது கல்விச் சமூகம் என்றென்றும் நன்றி உணர்வுடன் அவர்தம் பணியினைப் பாராட்டுவதோடு அவர் தம் நற்பணிக்காக சிரம்தாழ்த்தி அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின் றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் வி.பி.சர்மா அவர்கள் ஆசிரிய சேவையில் இருந்த காலம் தொடக்கம் நன்கு அறிந்தவன். அவர் அக்காலத்தில் உதயன்- சஞ்சீவி பத்திரிகையில் செய்தியாளராகக்கடமைபுரியும் வேளையில், புனைப் பெயரில் அவரது ஆன்மீகம், கல்வி, விவசாயம், துறைசார்ந்த செய்திக் கட்டுரைகளை வாசிப்பதில் அலாதிப்பிரியமுற்ற வாசகனாக இருந்தவன் நான். அவரது கட்டுரைகள், மக்களின் தேவைகள், குறைகள் நிறைவேறுவதற் கான பக்கச் சார்பில்லாத நடுநிலையான பத்திஎன தர்மத்தை அனுசரித்தே நியாயம் கேட்டும் முறையிலே காத்திரமான பங்களிப்புச் செய்து, அடக்கமாயும், அமைதியாயும் இருந்து அளப்பரிய செய்திச் சேவையாற்றியவர். அவருடைய செய்திக் கட்டுரைகள் கற்றோர் மத்தியில் பெரும் மதிப்பினைப் பெற்றது என்பதை பெருமனத்துடன் கூறுவது மிகையாகாது.

அவர் எமது பிரதேசக் கல்விநிலை வீழ்ச்சியடைவதை உணர்ந்து மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கான கல்விச் செயற்திட்டங்கள், அதிபர், ஆசிரியர்கள் வலுவூட்டற் கூடிய கல்வியின் பணிக்கு செய்திகளை பிரசுரித்து எல்லோரை யும் விழிப்படையச் செய்து கல்வி வளர்ச்சி பெற எங்களோடு உந்து சக்தியாக தொழிற்பட்டார் என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன். அவர் அடிக்கடி கூறுவார் "எல்லோருக்கும் இன்புற்றிருக்க நினையுங்கள். பணியாற்றுங்கள்" என்பார். அதாவது இன்றைய உலகில் அழிவுகள், அனர்த்தங்கள், கொடுமைகள், பெருகுகின்றன அது வேதனைக்குரிய விடயம். தெய்வீகப் பணியில் ஈடுபட்டு தார்மீக வழிநிற்க விரும்பும் நாங்கள் யாவரும் கவலையுடன் நோக்கவேண்டிய ஒரு பிரச்சினை. சுயநலம் வளர்ந்து பொது நலம் குன்றி வல்லவர்களால் நலிந்தவர்கள் அடக்கி ஒதுக்கப்படுவதுடன் பின்னயவரைப் பற்றிச் சிந்தித்து உதவ நல்ல உள்ளங்கள் இல்லையா என்று வினவ வேண்டிய நிலை இது.... ஆகவே எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கல்வி நிறுவனங்கள் சொந்த நாட்டிலே அநாதைகளாகிவிட்ட நலிந்த பலருக்கு நேசக்கரம் நீட்டி உதவி வருகின்றன. ஆனால் நடப்பது போதாது. இன்னும் தேவை. எமது மக்களை அவர்கள் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றிச் சிந்திக்க வைப்பது நமது கடமை. அதுவே எமது சமூகப்பணி என்பவர் எங்கள் வி.பி.சர்மா அவர்கள்.

அப்படிப்பட்ட நல்லவரையும் எமது கல்விச்சமூகம் இழந்திருப்பது மிகவும் கவலையளிக்கின்றது. ஆனாலும் மனிதனுக்குப் பிறப்பு இருந்தால் இறப்பு உண்டு என்பதால் அவர் செய்த உயரிய பணியினைத் தொடர்ந்து செயலாற்ற உதவுவதே அவருக்குச் செய்யும் பிரதி உபகாரமாகும்.

அன்னாரின் மறைவால் தவிப்புற்று நிற்கும் குடும்பத்தாரின் துயரத்தில் பங்கு கொள்ளுகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறஞ்சி வணங்குகின்றோம்.

**செ.குபேரநாதன்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**உடுவில் கல்விக்கோட்டம்.**

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.
- முதலில் கீழ்ப்படிதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
- பிரமச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வி அறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைக் கலை கைவந்தவர் சர்மா

பத்திரிகைத் துறையில் பணியாற்றுவதற்கான போதனைசார் பயிற்சி எதுவும் எமது பிரதேசத்தில், ஏன் இந்த நாட்டிலேயே இல்லாத காலம் அது. அதில் முழு ஆர்வமும் அதனைச் செய்வதற்கு ஏற்ற உள்ளார்ந்த திறனும் தொழில்சார் பயிற்சி மூலம் அதனைப் பயின்று கொள்வதில் கடும் முயற்சியும் உழைப்பும் இருந்தால் மட்டும் பத்திரிகையாளனாக வளர முடியும். பத்திரிகையாளனாக வளர்வதற்கு செய்தியாளனாகப் பணியாற்றும் பயிற்சியே அத்திபாரம்.

செய்தி எழுதுவதற்கும் சில வரையறைகள், வரைவிலக் கணங்கள் ஒழுக்கக் கோவைகள், மக்கள் நலன் மீதான அக்கறை என்பன அவசியம். மக்களுடன் நெருங்கிய தொடர்பு, உண்மையையே எழுதுவது, செய்திகளுக்கான தகவல்களை ஒரு முறைக்குப் பல தடவைகள் சரிதானா என்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளுடனும் தொடர்புகொண்டு உறுதி செய்வது, அடுத்தவர் கூறுவதை மட்டுமே ஆதாரமாகக் கருதாமல் தானே நேரில் அறிந்து கொள்வது ஆகிய பல அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தாக வேண்டும்.

ஒரு சிறந்த செய்தியாளனாவதற்கு நிறைந்த மக்கள் தொடர்பு தேவை. அதற்கான பண்பும் பழக்கவழக்கமும் குண இயல்புகளும் அத்தியாவசியம். தான் எழுதும் செய்தியை பல்லாயிரக்கணக்கானோர் வாசிப்பர். அதனால் அங்கு குறிக்கப்படும் ஒவ்வொரு தகவலும் சரியானதாக இருக்க வேண்டும்; சிறுதவறும் இல்லாது உறுதி செய்த பின்னரே அதனைப் பத்திரிகைக்கு அனுப்புவது என்பது இன்றியமை யாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது செய்தி பூரணத்துவமானது, உண்மையானது, மக்கள் நலன் நாடியது அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் சொல்லும் முழுமை உள்ளது என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு எழுதிய மிகச் சிறந்த செய்தியாளன் அமரர் விஸ்வநாத ஐயர் பரிபூரணானந்த சர்மா. கல்விப்புலத்தில் ஆசிரியனாகப் பணிபுரிந்த போதிலும், பத்திரிகைத் துறையிலும் அவர் மிகத்துலக்கமான முத்திரையைப் பதித்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட அத்தனை செய்தித்துறைக்கான தொழில் நுட்பங்களும் சர்மா அவர்களுக்கு அத்துப்படி. அவற்றில் கைதேர்ந்த, பத்திரிகைத்துறையின் மதிப்பை ஏனையவர்கள் மத்தியில் உயர்த்திய, கீர்த்தி மிக்க மூத்த பத்திரிகையாளர் அவர்.

உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே அவர் அதன் பிரதேசச் செய்தியாளர் பணியில் சேர்ந்து கொண்டார். கடமையிலே மிகக் கண்ணியமானவர்; கரிசனைகொண்டவர். முக்கியமான செய்தி எனின், நேரில் கொண்டு வந்து ஒப்படைத்து ஏனைய பத்திரிகைகளைவிட உதயன் முந்திக்கொண்டு பிரசுரிக்க வேண்டும் என்பதில் எப்போதும் அக்கறை காட்டியவர். உதயன் பத்திரிகைக் குடும்பத்துடன் மிகநெருங்கிய உறவை வைத்துக்கொண்டவர். அடிக்கடி அலுவலகம் வந்து எல்லோருடனும் நெருக்கமாகப் பழகியவர். அதனால் அவர் எங்களில் ஒருவராகவே பணிபுரிந்தார். சொந்தத்திலேயே சிறந்த குணாம்சங்களும் பண்புகளும் நிறைந்தவர். அமைதியானவர்; அடக்கமானவர்; அர்ப்பணிப்புள்ள பணியாளர். மற்றவர்களுக்கு மதிப்பளிப்பவர்; தலைக்கனமோ, பெருமையோ இல்லத நற்குணத்தோன்.

அவர் செய்தியாளராக மட்டுமன்றி, எந்த விடயத்தையும் தெளிவாகவும் சிறப்பாகவும், துல்லியமாகவும் வாசகனுக்கு

இலகுவாக விளங்கும் நடையில் எழுதும் கட்டுரையாளரு மாவார். பல தரம் மிக்க செவ்விகளை, செய்திக்கட்டுரைகளை நிறைமுனைவன், விஸ்வபரி, வி.பி.சர்மா, பரிபூரணன் ஆகிய புனைபெயர்களில் மறைந்து நின்று உதயனில் எழுதிக் குவித்தவர். ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், எண்ணிக்கையில்லாமல் எழுதினார். பல பெரியவர்களின் கருத்துகளை, அனுபவங்களை செவ்விகளாக்கி அவற்றைப் பதிவு செய்து, இளம் சந்ததியினருக்கு வழங்குவதில் நிறைந்த ஆர்வமும் அக்கறையும் காட்டினார். பத்திரிகையில் வெளியிடப் பட வேண்டும். வாசகனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என மனதில் தோன்றுபவற்றை எங்களோடு கலந்தாலோசித்து எழுத்தில் வடித்தார்.

இருபது வருடங்களாக உதயன்-சஞ்சீவி குடும்பத்தில் இணைந்து அவர் ஆற்றிய பத்திரிகைப் பணி மிகமிகச் சிறப்பானது. அது அவருக்குக் கைவந்த கலையானது. உதயன் குடும்பத்தின் மிக மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவராக, எங்களில் ஒருவராக விளங்கிய அவர் திடீரெனப் பிரிந்து எங்களைச் சோகத்தில் ஆழ்த்திவிட்டார்.

அவரது இடத்தை நிரப்புவதற்கு, அவரைப் போன்றே பத்திரிகைப் பணியில் பற்றுவைத்து உழைக்கக்கூடிய ஒருவரைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம்; வளர்த்தெடுப்பதும் கடினம் என்ற அளவுக்கு அவரது இழப்பு எம்மைப் பாதித்துள்ளது.

அவர் என்றென்றும் உதயன் சரித்திரத்தில் நினைவில் நிற்பார். அவரது ஆன்மா இறைவன் நீழலில் ஒன்று சேரப்பிரார்த்திக்கின்றேன்.

ம.வ.கானமயில்நாதன்,
பிரதம ஆசிரியர்,
உதயன்-சஞ்சீவி.

28.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர் அமரர் வி.பி.சர்மா அவர்கள்

ஒருவன் மனிதனாக வாழவேண்டுமானால் சேவையுடனான வேலையும், குடும்பப் பொறுப்பும் சமூகப் பங்களிப்பும் அவசியம் இருத்தல் வேண்டும் எனும் "பாபா" அருள் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர் வி.பி.சர்மா அவர்கள்.

சேவையில் சிறந்த ஆசிரிய சேவையில் தன்னாலானதைச் செய்து தன் குடும்பத்தையும் தன்னிலைக்கேற்ப உயர்த்தியதுடன் தனக்குக் கைவந்த எழுத்துத்துறையின் மூலம் சமூகத்திற்குத் தன் பங்கை வழங்கியுள்ளார். சாதாரணமாக ஒருவனின் சமூக சேவை தான் வாழும் சூழல் அல்லது பயனாளிகள் மட்டத்திலாகவே இருக்கும். எழுத்துத்துறையில் கால் பதிப்போர் சேவையும் அதில் ஆர்வம் உள்ளோர்க்கு மட்டும் பயனுள்ளதாக அமையும். ஆனால் பத்திரிகையில் பல்துறைசார் கட்டுரையானது உலகுக்குப் பயன்தருவதுடன் ஆவணப்பதிவாகவும் ஆகிவிடுகின்றது. எல்லோருக்கும் அமையாத இந்தத்திறனும் வாய்ப்பும் வி.ப.சர்மாவிற்கு கைவந்தது எல்லோருக்கும் பெருமை தருவதாகும். அகவை அறுபதின் பின் அவர் ஆற்றல் பரந்தது. சமயச் செய்திகளும் விசேடமாக இந்துக்குருமார் சார்ந்த நிகழ்வுகளை வெளிக்கொணர்வதும் அவரின் சேவையில் இடம் கொண்டன. அன்னார் 'நியந்த்ரீ', இந்துக்குருமார் ஒன்றியம் ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து செய்திக்கட்டுரைகள் பல வரைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சேவையில் வளர்ந்து வந்த வேளையில் அவருக்கு அகவை அறுபத்து மூன்று. இப்போது அவர் போக வேண்டிய தேவையே இல்லையே. இன்னும் எத்தனையோ கட்டுரைகள் செய்திகள் வரைய வேண்டிய அவர் ஏன் அவசரப்பட்டுப் போனார். அவ்வுலகில் செய்திக் கட்டுரை வரைவோர்க்காக வெற்றிடம் பற்றி உதயனில் விளம்பரம் வந்ததோ...

ந.சதாசிவ ஐயர்,
சமாதான நீதிவான், உதவிப்பதிவாளர் நாயகம்,
வடக்கு வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நல்லாசான்

உடுவில் விஸ்வநாதக்குருக்கள் என்றவுடன் உயரிய அந்தணர், சமயம் வடமொழி, தமிழ் கற்ற அறிஞர், ஒரு நல்லாசிரியர் என்பது எல்லோருக்கும் நினைவிற்கு வரும். இது எல்லோரும் அறிந்த உண்மையும் கூட. அவரது மகன் பரிபூரணானந்த சர்மா அவர்கள் நவாலி மகா வித்தியாலயத்தில் பணிகளை ஆற்றிவரும்போது அவர்களை எமது பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வரும்படி வேண்டுதல் விடுத்தபோது மனமுவந்து ஏற்று 01/03/1992 இல் எனது பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டார்.

பாடசாலை நிருவாகம், ஆலோசனை வழங்கல், வழிகாட்டல்களை மேற்கொள்ளல், அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுதல் போன்ற பல பணிகளுக்கு அனுபவமிக்க ஒருவராக விளங்க வேண்டும் என எதிர்பார்த்தோம். ஆனால் அவரிடம் இவற்றைவிட மேலும் பல குணாதிசயங்களும் சிறப்பு ஆற்றல்களும் காணப்பட்டன.

பாடசாலையில் பிரதானமாக வர்த்தக பாடத்தை கற்பித்தார். எனினும் ஆசிரியர் பற்றாக்குறையுள்ள காலத்தில் தமிழ்மொழியுடன் வேறு பாடங்களையும் திறமையாக கற்பித்துள்ளார். வசதிகுறைந்த பின்தங்கிய மாணவர்களின் நலன்களில் கூடிய கவனம் செலுத்தி அவர்களின் உயர்வில் மகிழ்ச்சி கண்டவர். வர்த்தக பாடத்தில் உயர்ந்த பெறுபேறுகள் கிடைப்பதையிட்டு பெருமையடைந்தவர். வர்த்தக பாடத்தைக் கற்பிக்கும் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக விளங்கினார்.

பாடசாலையில் இணைந்த காலம் முதல் ஓய்வு பெறும் வரை பாடசாலையின் விளையாட்டுத்துறைப் பொறுப்பா சிரியராக அரும்பணியாற்றி யாழ் மாவட்ட கல்விப்பணிப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளரின் பாராட்டை பெற்றுக் கொண்டார். பாடசாலை ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் தலைவராகவிருந்து பணியாற்றியுள்ளார். அவர் பாடசாலை ஆசிரியர்களிடையே நல்லுறவும், புரிந்துணர் வும் வளர்க்கப்படுவதால் பாடசாலையை நல்லமுறையில் வளர்க்க முடியும் எனக் கருதிச் செயற்பட்டார். இது பாடசாலை யின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியது.

பாடசாலையில் நூலகம் முதன்முதலில் ஒன்றை அமைத்து அதனை வளர்க்கும் பணியில் ஐயா அவர்கள் முயற்சி எடுத்து வெற்றியும் கண்டார். மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நேரிடும் போது மாணவர்கள் ஏற்கக்கூடிய முறையில் அவர்களைத் தண்டித்து வழிப்படுத்துவார்.

மேலும் அறிக்கைகள் தயாரித்தல், மாணவர் அனுமதி வழங்கல், விடுகைப்பத்திரம் வழங்கல், மற்றும் புதிய செயற்திட்டங்கள் அறிமுகமாகும்போது அவற்றை நிறைவேற்ற உதவுதல் போன்றவற்றையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்.

16.12.1996 ஆம் திகதி சேவை மூப்பு திறமை அடிப்படையில் கல்வித்திணைக்களம் இவரை பாடசாலை நிர்வாகக்கட்ட மைப்பினுள் இணைத்துக் கொண்டது. 22.07.2002இல் சேவையிலிருந்து தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார்.

தனது ஓய்வு நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி யுள்ளார். பத்திரிகைக்கு கட்டுரைகள் வழங்குதல், அறிஞர்களை பேட்டிகாணுதலும் அவற்றை பத்திரிகையில் பிரசுரித்தலும், செய்திகளைச் சேகரித்து வழங்குவதும் பிரதான பணியாக கொண்டிருந்தார். கட்டுரைகளும், செய்திகளும் சமூகத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன. பாடசாலை தொடர்பான செய்திகள் பாடசாலைக்கு பெருமையையும், புகழையும் தேடிக் கொடுத்தன. துணிந்து நடுநிலை தவறாது உண்மைச் செய்திகளை வெளியிட்டார். இதனால் சிலசமயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனங்களுக்குள்ளான போதும்கூட அவற்றைப் பொருட் படுத்தாது பத்திரிகைத்தர்ம நெறியில் நின்று பணியைச் செய்து வந்தார். மேலும் சிறந்த வீட்டுத்தோட்டமும், கால்நடை வளர்ப்பும் மேற்கொண்டு தன் ஓய்வு நேரத்தை உச்சமாக பயனுள்ளதாக்கியிருந்தார். வீட்டிற்கு எவர் சென்றாலும் இன்முகத்துடன் வரவேற்கும் பண்பும் உபசரிக்கும் பண்பும் அவர்களுக்கு பல நண்பர்களை உருவாக்கியது. இது அவர்களுக்கு உதவுவதுடன் மட்டுமல்லாது தனது தேவை களையும் எளிதில் நிறைவு செய்யமுடிந்தது. எல்லோரையும் மதிக்கும் பண்பு அவரையும் உயர்த்தியது.

புரட்சிகரமான சிந்தனை நடுநிலமை, இரக்கம், ஆகிய இயல்புகளை இறுதிவரை அவரிடத்து காணமுடிந்தது. ஐயா அவர்களின் சேவையை அங்கீகரித்து 17.09.2003 ஆம் திகதி முதல் சமாதான நீதிவான்(ஜே.பி) பட்டத்தை அரசு வழங்கி கௌரவித்துள்ளது. பாடசாலைச் சமூகம் அவரின் சேவைகளை நயந்து 12.10.2003இல் பெருவிழா எடுத்து அவரை கௌர வித்துள்ளது.

அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் ஐயா தீடீரென எம்மைவிட்டுப்பிரிந்தமை எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. "ஐயா" அவரின் மறைவு பத்திரிகை உலகிற்கும் கல்வி உலகிற்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகிவிட்டது.

பாடசாலைச் சமூகத்தின் சார்பிலும் எனது சார்பிலும் எங்கள் பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசானுக்கு செலுத்துவ துடன் அவரது ஆன்மா சிவப்பேறடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

க.செல்வக்குமரன்,
அதிபர்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் எம் மனங்களில் நிறைந்து நிற்கும் வி.பி.சர்மா ஐயா

என்றும் தன் மனதில் நல்ல சிந்தனைகளையும் நல்ல கருத்துக்களையும், தோன்றும் போது அவற்றை பத்திரிகை மூலமும் மாணவர்கள் மட்டத்திலும் தெளிவுபடுத்துவதில் மிகவும் சிறந்த ஓர் ஆசான் ஆவார். சுன்னை நகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கதிரைமலைச்சிவன் தேவஸ்தானத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர். இவ் ஆலயத்தில் நடைபெறும் எல்லா விழாக்களிலும் கலந்து சிறப்பிப்பதுடன், ஆலய வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்குவதில் பின்நிற்பதில்லை. மேலும் ஆலயத்தில் வழிபடும் மக்களோடு நெருங்கிப்பழகியவரும், ஆலய விழாக்களை அவ்வப்போது உதயன் பத்திரிகையில் செய்தியாக வெளிவரச் செய்தவரும் ஆவார்.

பத்திரிகையில் வி.பி.சர்மா என எழுதிய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய கருத்துக்கள், சைவசமயஞ் சார்ந்த நற்சிந்தனைக் கருத்துக்கள் அவர் மறைந்தும் கதிரமலைச்சிவன் தேவஸ்தான அடியவர்கள் மனங்களில் என்றும் நிறைந்து நிற்பார் என்பது உறுதி என்பதுடன் அவருடைய ஆன்மா ஸ்ரீசுவர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாணர் பாதங்களில் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆலய தொண்டர்கள் சார்பில்
மு.செல்வஸ்தான்,
அதிபர்.

ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மஸ்ரீ வி.பரிபூரணானந்த சர்மா அவர்கள்

இறையடி எய்தியமையையொட்டி அவரின் உடன்பிறவா சகோதரன்

பிரம்மஸ்ரீ வை.யோகீஸ்வரன் அவர்களின்

## இரங்கற்பா

மங்காத புகழ் பூத்த ஈழவளநாட்டின்
மகுடமென மிளிர் யாழ்ப்பாணத்தின்
அங்கமதாய் அணிசெய்யும் உடுவிலம் பதியின்
அந்தணர் பெருமகன் விஸ்வநாதக் குரு
சக தர்மினி லலிதாம்பிகை ஈன்றளித்த
முத்தணைய பரிபூரணானந்தச் செல்வம்
இகவாழ்வைத் துறந்த செய்தி இடியாக வந்ததம்மா!
என் சித்தப்பா தந்த சீர் மிகு ரத்தினமே!
இளமையிலிருந்தே உன் புத்தியும் ஆற்றலும்
நீ சொரிந்த பரிவும் பாசமும் என் நினைவிலாட
அழுவைத்துவிட்டு அமைதியாய் நீ மீளாத்துயிலில்
ஆனால் நாமோ நெஞ்சுருகித் தேம்புகின்றோம்
முருகமூர்த்தி வித்தியாலயத்தில் ஆசிரிய முதல்வராய்
நானிருந்த வேளையிலே ஆசிரியராய், உப அதிபராய்
அருகாக நீ இருந்து ஆற்றிய கல்விப்பணி கணக்கிலடங்கா
என் வலக்கரமான நீ இன்றில்லையென்றாலும்
என் மனசில் என்றும் வாழ்வாய் சிங்கமிடுக்கோடு,
ஊடகவியலாளனாக, உயர் ஆசிரியராக உயர்ந்தவனே
செம்மனத்தாள் உன் துணை ரேவதியும் பிள்ளைகளும்
உற்றார் உறவினர் நண்பர்களும் துடித்தலற
தென்புலத்தார்க்கும் சேவை செய்யச் சென்றனையோ
மண்ணுலகு மறக்காது உன்நினைவை மன்னவனே!
நேற்றிருந்தார் இன்றில்லை என்கின்ற நற்பெருமை
நிலையற்ற இவ்வுலகிற்கு நெடுங்காலமாக உண்டு.
கற்பக்குணை வீற்றிருந்தருளும் வீரகத்தி விநாயகர்
பொற்பாதம் நீ சென்றணைந்து நிலைத்திட
மனமுருகிப் போற்றிப் பிரார்த்தித்து அனுதினமும்
ஆராதித்து மன அமைதி கொள்வோம்!

ஆறாத்துயருறும் சகோதரன்

கொழும்பு — வை.யோகீஸ்வரன் மற்றும் குடும்பத்தினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் சம்மேளன இரங்கற் செய்தி

வி.பி.சர்மா அவர்களின் திடீர் மறைவு விவசாய மக்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. எமது விவசாய சம்மேளனத்துடன் கடந்த பல வருடங்களாக விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு பத்திரிகை மூலம் எமது செய்திகளை ஆணித்தரமாக எழுதி நன்மையடையச் செய்துள்ளார். இவரின் சேவையையை பாராட்டும் முகமாகக் கிடைத்த "சமாதான நீதவான்" பட்டம் குறித்து எமது சம்மேளனம் பெருமை கொள்கின்றது.

கடைசி நேரம் வரை தமது பத்திரிகைச் செய்திகளை வலி.தென்மேற்கு, வலி.தெற்கு ஆகிய பிரதேச செயலகங்களில் விவசாயம், கல்வி, சமயம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வந்தவராவார். இவர் வழுக்கி ஆற்றுத்திட்டத்திற்கு ஆற்றிய கட்டுரைகள் மூலம் நியாப் அமைப்பு 200 கோடி ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

அன்னாரின் மறைவால் தவிப்புற்று நிற்கும் குடும்பத்தா ருக்கு எமது அனுதாபச் செய்திகளை அறிவிப்பதுடன்

சி.பொ.வா.மா.க.முதலியார் (ஜே.பி),
தலைவர்,
மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்புகள் மிகு ஆப்த நண்பன்

எனது பெருமதிப்புக்குரிய குரு காலம் சென்றவிசுவநாதக் குருக்களின் கனிஷ்ட புதல்வன் அமரர் பரிபூரணனந்தசர்மா அவர்கள் ஆரம்ப காலத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எனது சகமாணவராகவும், அதனைத் தொடர்ந்து நற்பண்புகள் நிறைந்த ஆப்த நண்பனாகவும், சகோதரத்துவ மனப்பான்மையு டைய நல்ல அயலவராகவும் பழகிவந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் ஏறக்குறைய 5 தசாப்தங்களாக நாம் இருவரும் ஒருவர் மீது ஒருவர் பெருமதிப்புடனிருந்து பல சீர்திருத்த சிந்தனைகளைப் பரிமாறியிருக்கின்றோம். இவ்வளவு விரைவில் அவர் கடும் சுகவீனத்துக் குள்ளாகி மரணிப்பார் என்று கற்பனையில்கூட கூறமுடியவில்லை. அவரது பிரிவு மிகவும் வேதனைக்குரியதாகும். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாங்களும் கலந்து கொள்கின்றோம்.

அவர் படித்து பதவி வகிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து ஓய்வு பெற்ற காலம் வரை தன் சேவைக்காலம் முழுவதையும் முழுமையாக ஆசிரியத் தொழிலிற்கு அர்ப்பணித்து 34 ஆண்டுகள் ஆசிரியராக வெவ்வேறு பாடசாலைகளில் கடமைபுரிந்திருக்கின்றார். ஆசிரியத் தொழிலை தன் ஊழியத்தொழிலாக மட்டும் கருதாது நல்ல சிறந்த ஆசிரியனுக்கு உதாரணமாகி, தன் தந்தைக்குப் பெருமை சேர்த்த மைந்தனாக மட்டுமல்லாது, கல்விச் சமுதாயத் துடன் இணைந்து சமூகத்தில் நற்பிரசைகளையும், கல்விமான் களையும் உருவாக்க வேண்டுமென்ற மேன்மையான எண்ணக்கரு வைக் கொண்டவராகத் திகழ்ந்தார். அவ்வாறான உயர்ந்த சிந்தனை யுடனான செயற்பாட்டினால் ஊரிலும் கல்விச் சமூகத்திலும் சர்மா ஐயா என்ற மதிப்பான பெயருடன் விளங்கினார்.

ஆசிரியர் தொழிலுடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்திற்கு மேலும் மேலும் தொண்டுகள் புரிய வேண்டுமென்ற ஆதங்கத்தி னால் ஒருகாலத்தில் எமது தேசத்தின் நீதி நிருவாகம் சீரற்ற நிலையிலிருந்தபோது உதவி அரசாங்க அதிபரின் அனுசரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் மக்கள் பிணக்குளைத் தீர்த்து வைப்பதற்கென ஏற்படுத்தப் பட்ட மக்கள் குழுவின் கௌரவ செயலாளராகத் தெரிவாகி ஏறத்தாழ 2 வருடகாலத்தினுள் 200க்கும் மேற்பட்ட பிணக்குகளை, பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த செயல்பாட்டில் எதுவித மனச்சோர்வுமில்லாமல் துணிச்சலுடனும், சேவை மனப்பான்மை யுடனும் செயலாற்றிய சமூகசேவையாளன். இத்தகைய மகத்தான சேவைகளினால் அவர் ஊரிலும், சமூகத்திலும் உற்றார், உறவினர் மத்தியிலும் பெருமதிப்புக்குரியவரானார். அத்துடன் எமது ஊரி லுள்ள உடுவில் இந்து இளைஞர் மன்ற மூத்த ஆலோசகராகவும் விளங்கி சமயத் தொண்டாற்றும் தகைமையையும் அடைந்தார்.

அவர் தொடர்ந்து செய்து வந்த சேவைகள் காரணமாக அவரை நாடி சமாதான நீதவான் பட்டமும் கிடைக்கப் பெற்றார். சமாதான நீதவனாகிய அவர் ஆற்றிய நேர்மையான சேவையால் சமாதான நீதவான் பட்டத்திற்கு பெரும் பெறுமதி சேர்த்தவராகத் திகழ்ந்தார்.

அத்துடன் எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஒரு நீண்ட கால பத்திரிகை ஆசிரியராவார். ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஒரு முழுநேர மூத்த பத்திரிகையாசிரியராக விளங்கினார். உடல் நலம் பாராது உற்சாகத்துடன் செய்திகள் சேகரிப்பது, துறைசார் பேரறிஞர்களைப் பேட்டிகண்டு பத்திரிகைக்குப் ஆய்வுக்கட்டுரைகள் எழுதி பத்திரிகைவாயிலாக பாமரமக்களும் வாசித்து அறிந்து அறிவை வளர்க்கக்கூடிய சேவையில் ஆர்வமுடை யவராக கடைசிக் காலத்தில் திகழ்ந்திருக்கிறார். உடனுக்குடன் செய்திகளை எழுதுவதுடன் துணிச்சல்மிக்கவராகவும் காணப் பட்டார். நன்றாகச் சிந்தித்து சரியெனத்தென்படும் விடயங்களை எந்தவித நெருக்குதலுக்கும் அஞ்சாது எழுத்துவடிவில் கொடுக்க வல்ல ஆற்றலும் துணிச்ச லும் மிக்க பத்திரிகை ஆசிரியர் ஒருவரை எமது பிரதேசம் இன்று இழந்துவிட்டது. அத்துடன் நன்நோக்கு டைய நேர்மைமிக்க பொறுமைக்குணம் படைத்த ஒரு நல்ல பிறவியை ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டோம்.

த.தேவராஜன்,
ஓய்வுபெற்ற உதவிப்பிரதேச செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பத்திரிகையாளர் வி.பி.சர்மா காலமானார்



யாழ்ப்பாணம், நவ.24

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் மூத்த செய்தியாளர் விஸ்வநாத ஐயர் பரிபூரணானந்த சர்மா தமது 63 ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார் என்ற செய்தியை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

சிறிதுகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் நேற்று அதிகாலை யாழ். போதனா மருத்துவமனையில் காலமானார்.

உடுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர் பரிபூரணானந்த சர்மா.

பத்திரிகை உலகிலும் நண்பர்கள் வட்டாரத்திலும் 'வி.பி.சர்மா' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்.

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் ஆரம்பம் முதல் அவற்றின் செய்தியாளராகத் தன்னை இணைத்துக்கொண்ட சர்மா, இறக்கும் வரை ஒரு துடிப்புள்ள செய்தியாளனாகச் செய்திப் பணி புரிந்துவந்தார்.

முதலில் மானிப்பாய்ப் பகுதிக்கான பகுதிச் செய்தியாளராக இணைந்துகொண்ட சர்மா, விரைவிலேயே வலி. தெற்குப் பகுதிக்கான பிரதேசச் செய்தியாளராக தன் தரத்தை உயர்த்திக் கொண்டார்.

சளைக்காமல் செய்திகளை எழுதிக் குவிப்பதுடன், நின்று விடாமல் பல்வேறு துறைகள் சார்ந்த ஏராளமான கட்டுரைகளையும் அவர் வரைந்துள்ளார்.

ஆன்மீகம், கல்வி, விவசாயம் உட்படப் பல துறைகளில் அவர் வரைந்த கட்டுரைகள், செய்திக்கட்டுரைகள் என்பன வி.பி.சர்மா, நிறைமுனைவன், விஸ்வபாரி, பரிபூரணன் போன்ற புனைப்பெயர்களில் உதயனை அலங்கரித்தன. பத்திரிகையியலில் அவர் கடம் பதிக்காத துறை, பிரிவு இல்லை என்று கூறுமளவுக்கு அவரது பணி விரிவானதாக அமைந்தது. அடக்கமாகவும் அமைதியாகவும் இருந்து அளப்பரிய செய்திச் சேவையாற்றியவர்.

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் செய்திச் சேவையில் கடைசிவரை சலிப்பின்றி அவர் புரிந்த காத்திரமான பங்களிப்பு இளையதலைமுறை ஊடகவியலாளர்களுக்கு ஓர் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கது.

அரச சேவையில் ஆசிரியர், பகுதித் தலைவர் என்ற பதவிகளை வகித்து கல்விப் புலத்திலும் சீரிய பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் சர்மா.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் ஆசிரியராகவும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் பகுதித்தலைவராகவும் கல்விச் சேவை புரிந்தவர் சர்மா.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் பல பொதுப்பணி அமைப்புகளிலும் இணைந்து பணியாற்றியுள்ளார். அத்துடன், ஒரு சமாதான நீதிவானுமாவார்.

'உதயன்' பத்திரிகை அதன் வளர்ச்சிப்பாதையில் இருபது அகவைகளை நிறைவு செய்யும் இந்தவேளையில் மூத்தசெய்தியாளர் சர்மாவின் மறைவு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஓர் இழப்பு ஆகும்.

அன்னாரின் மறைவால் தவிப்புற்று நிற்கும் குடும்பத்தாரின் துயரத்தில் 'உதயன்' குடும்பமும் பங்குகொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



22.11.2005 அன்று காலமாகிய

## விஸ்வநாதக்குருக்கள் பரிபூரணானந்த சர்மா

கந்தரோடை கலைமதி
சனசமூக நிலையத்தின்
விந்தையாம் வளர்ச்சியில்
இருபத்து ஆண்டுகள்
அரும்பெரும் தொண்டனாய்
அரியவழி காட்டியாய்
இருந்த எம் ஐயாவின்
இழப்பினால் துயருறும்
அன்னாரின் குடும்பத்து
அனைவர்க்கும் எமது
அனுதாபங்களைத் தெரிவித்து
ஆத்ம சாந்திக்கு
அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவினால் துயருறும்,
கலைமதி ச.ச.நிலையம்
அறிவழி பாலர் பாடசாலை.

22.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம்கடன் பணிசெய்தல்"

## உடுவில் இந்து இளைஞர் மன்றம்

எமது மன்றச் செயலாளர் சசிவர்ணனின் தந்தையாரும்
எமது கௌரவ ஆலோசகருமான

அமரர்

## பிரம்மஸ்ரீ விஸ்வநாதஐயர் பரிபூரணானந்தசர்மா (J.P)

(இளைப்பாறிய உபஅதிபர், யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை)



இறைமகனாய்
20✦07✦1942

இறைவனாய்
23✦11✦2005

சீர் உடுவைப் பதியிதற்கு
பேனாவால் பெருமை சேர்த்தீர்
பரிபூரணப் பெரியோன்!
நீர் உலகுநீக்கி நிர்மலன்தாள்
சேர்ந்த சேதி காலைவந்தது கலங்கினோம்
பார்த்த திருமுகம் திருநீறாக
வார்த்தைகளால் வணங்கி அஞ்சலித்தோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானிப்பாய் வீதி,
உடுவில்.
[illegible].11.2005

துயர் பகிரும்
நிர்வாகசபை,
உடுவில் இந்து இளைஞர் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்மகிழ 20 - 07 - 1942

விண்மகிழ 23 - 11 - 2005

அமரர்

## பிரம்மஸ்ரீ வி.பரிபூரணானந்த சர்மா (J.P)

சிரித்த முகத்தோடு சிந்திக்க கதைகூறும்
'பரிபூரண நிலவு' இன்று படுத்ததென்ன
மங்கள நாணுக்கு கைகொடுத்து
வாழ்வோடு இருந்த 'ஆனந்தம்'
சாவை அணைத்த தென்ன!
ஊருக்காய் உழைத்து உயர்வுகண்ட நல்லாசான்
தன்பணி முடித்து
தனிமையில் வெறுமையாக
உறவறுத்துச் சென்றதுவோ!
திறந்து மூடுகின்ற இமைகள்
நிரந்தரமாய் மூடினாலும் – ஊழிப்பெருவெள்ளத்தில்
யுகங்களாக உங்கள் நினைவுகளைத் தரிசிப்போம்...

எமது பாடசாலையின் முன்னாள் பகுதித்தலைவர் அமரர் பிரம்மஸ்ரீ வி.பரிபூரணானந்த சர்மா அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

- ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

23.11.2005

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி சர்மாவின் சிந்தனையில்......

பிறப்பெடுத்த மக்கள் அனைவரும் தங்களைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். புல், பூண்டு முதலாக எத்தனையோ பிறவிகளை நாம் கண்ணால்க் காண்கிறோம். அவைகளுள் தலைசிறந்ததாக காணப்படுவது மானிடப் பிறவியாகும்.

"சிவேருஷ்டே குதுஸ்த் ராதா குரௌ
ருஷ்டே நகச்சன"

சிவன் கோபித்தால் குரு காப்பாற்றுவார், குரு கோபித்தால் காப்பாற்றுவார் யாருமில்லை என்ற சான்றோர் வாக்கு ஒன்று உண்டு. இதன் கருத்து யாதெனில் சிவாபசாரம்நேர்ந்துவிட்டால் குரு அதற்குரிய பிராயச்சித்தத்தை விளக்கிப் பரிகாரம் கூறுவர். அதனால் சிவபோபம் தணிந்து சிவனருள் கிடைக்கும். குருவிற்கு அபசாரம் நேர்ந்து விட்டால் அந்தக் குற்றத்தை நீக்குவதற்கு உரிய பிராயச்சித்த விதிகளைக் கூறுவார் யாரும் இல்லை என்பதேயாகும். ஆகவே குருவழிபாடு சிவவழிபாடாகவே கருதப்பட்டுள்ளது.





பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org